


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 07.10.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்

We Shine Academy™

# இந்திய நிகழ்வுகள்

- அணுகுண்டு உள்ளிட்ட **1000 கிலோ** ஆயுதங்களை சுமந்து சென்று, சுமார் 350 கி.மீ. தூரமுள்ள எதிரிகளின் இலக்கை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட **"பிரித்வி – 2" Prithvi-2** ஏவுகணை **ஒரிசா மாநிலத்தின்** பாலசோர் அருகில் உள்ள சந்திப்பூரில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது. மொபைல் சாலஞ்சர் கருவியில் இருந்து செலுத்தப்பட்டதும் திட்டமிட்டபடி பறந்து சென்று இலக்கை அழித்ததும் இதன் சிறப்பம்சமாகும்.
  - இந்த ஏவுகணை **2003ம் ஆண்டு** இந்திய பாதுகாப்புப் படையில் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- 2018ம் ஆண்டிற்கான மின்னணு முறையிலான வழங்கீட்டை ஏற்றுக் கொள்ளும் அரசு தரவரிசைப் பட்டியலில் **(GEAR – Government e-payment Adoption Ranking) 78 நாடுகளில்** இந்தியா 28வது இடத்தைப் பிடித்துள்ளது.
  - 2011ம் ஆண்டில் 36வது இடத்தில் இருந்த இந்தியாவானது 8 இடங்கள் முன்னேறியுள்ளது. இது டிஜிட்டல் மாற்றம் நோக்கிய நாட்டின் முன்னேற்றத்திற்கு வலுவூட்டுகிறது.

# உலக நிகழ்வுகள்

- மெக்சிகோவில் நடைபெறவிருக்கும் **46வது சர்வதேச செர்வன்டினோ திருவிழாவில் 46th Edition of Cervantino International Festival** முதல் முறையாக இந்தியாவானது மரியாதை விருந்தினராக பங்கேற்றுள்ளது.
  - இத்திருவிழாவானது **1953 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.** இந்தியா 1979 முதல் இத்திருவிழாவில் கலந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

- சிரியா நாட்டில் பணியாற்றும் தனது இராணுவ அதிகாரிகளின்

பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக சிரியாவிற்கு நிலத்திலிருந்து வான்வெளியை தாக்கும் ஏவுகணை அமைப்பான **S-300-ஐ** ரஷ்யா அளித்துள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- ஆட்டோ மற்றும் வாடகை வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக **மைசூர் நகர** காவல் துறையானது **“மை சூரக்ஷா” (My Suraksha)** மொபைல் செயலியைத் தொடங்கியுள்ளது.
    - இச்செயலியானது எஸ்ஓஎஸ் (SOS) என்ற அசாதாரண சூழ்நிலையில் அழுத்தக்கூடிய பொத்தானைக் கொண்டுள்ளது.
    - இந்தப் பொத்தானை அழுத்தினால் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள புவி இடங்காட்டி அமைப்பு மற்றும் QR குறிமுறையின் மூலம் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவலை அனுப்பும்.

## நியமனங்கள்

- **ஜெனீவாவின் ஆயுதக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகளின்** மாநாட்டிற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் தூதராகவும் **‘பங்கஜ் ஷர்மா’** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - **Indian Permanent Representative to the United Nations Conference on Disarmament in Geneva**
    - இவர் அமந்தீப் கில்-க்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **உலக ஆசிரியர் தினம் - அக்டோபர் 05**

We Shine Academy TM

- உலக கல்வியாளர்களை பாராட்டி அவர்களை மதிப்பிட மற்றும் மேம்படுத்திட **யுனெஸ்கோவினால்** தொடங்கப்பட்ட வருடாந்திர அனுசரிப்பு தினமே **உலக ஆசிரியர் தினம்.** இத்தினமானது ஆண்டு தோறும் அக்டோபர் 05 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- **இத்தினமானது 1994** முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2018ம் ஆண்டு உலக ஆசிரியர் தினத்திற்கான கருத்துரு (Theme) – **"The Right to Education Means the right to a qualified teacher".**

## பொருளாதார நிகழ்வுகள்

- இந்திய ரிசர்வ் வங்கியினால் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படும், இந்த ஆண்டுக்கான **4வது பணக்கொள்கை** சம்பந்தமான கூட்டம், ரிசர்வ் வங்கியின் கவர்னர் **உர்ஜித் பட்டேல்** தலைமையில் நடைபெற்றுள்ளது.
  - இந்தக் கூட்டத்தின் முடிவில் ரெப்போ விகிதம், மற்றும் ரிவர்ஸ் ரெப்போ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- குறிப்பு:
  - தற்போதைய, ரெப்போ விகிதம் - 6.5%
  - ரிவர்ஸ் ரெப்போ விகிதம் - 6.25%
  - வங்கி விகிதம் - 6.75%
  - Cash reserve Ratio – 4%
  - SLR (Statutory Liquid Rate) – 19.5%

- இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியானது **(SIDBI – Small Industries Development Bank of India)** தேசிய அளவிலான தொழில் முனைவோர் பிரச்சாரமான **'உதயம் அபிலாஷா'-வை** தொடங்கியுள்ளது. **(National level entrepreneurship awareness**

We Shine Academy™

**campaign – Udyam Abhilasha)**

- ○ இது 28 மாநிலங்களிலிருந்து நிதி ஆயோக்கால் அடையாளம் காணப்பட்ட 115 இலட்சிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது.

We Shine Academy™